வாசகங்களை அன்பு கூர்ந்து பயன்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த மாவட்டங்களில், குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்தில் முழுமையான அமைதி நிலவுகிறது என்பதை மீண்டும் தெரிவித்துக்கொண்டு அமருகிறேன்.

2. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஈ) அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவித்த தி.மு.க. உறுப்பினர்களைப் பேரவைப் பணிகளினின்றும் கூட்டத் தொடரின் எஞ்சிய நாட்களுக்கு நீக்கி வைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவை விதி 120-ன்கீழ் உறுப்பினர் ஒருவரது நடத்தை மிகவும் ஒழுங்கீனமானது என பேரவைத் தலைவர் கருதினால், அவரை உடனடியாக அவையிலிருந்து வெளியேறுமாறு ஆணையிடலாம். அவ்வாறு பணிக்கப்பட்டால், அதாவது அவர் வெளியேற்றப்பட்டால், அவர் அன்றையதினம் கூட்டத்திற்கு வர இயலாது. உறுப்பினரை ஒரே கூட்டத் தொடரில் இரண்டாவது முறையாக அவ்வாறு வெளியேற்றினால், அவரை அந்தக் கூட்டத் தொடரில், நடக்க இருக்கும் கூட்டங்களுக்கு வராமல் இருக்குமாறு ஆணையிடலாம். இந்த விதியின் அடிப்படையில் இன்று அவைக்கு வந்திருந்த தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் இரண்டாவது முறையாக வெளியேற்றப்பட்டுள்ளதால், அவர்கள் நாளையதினம் நடைபெறும் கூட்டத்தில் கலந்துகொள்ள இயலாது என ஆணையிடுகிறேன்.*

7. அறிக்கை அளித்தல்

சட்ட விதிகள் ஆய்வுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கை அளித்தல். சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. செந்தமிழன், சட்ட விதிகள் ஆய்வுக் குழுத் தலைவர்.*

பிற்பகல் 12-10

*****திரு. ஞா. செந்தமிழன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நித்தம் நித்தம் நாங்கள் போற்றி வணங்குகின்ற, எங்களுடைய அன்னையாய், ஆசானாய் விளங்குகின்ற இதய*

2012 நவம்பர் 1] [திரு. ஞா. செந்தமிழன்]

தெய்வம், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் காலடியில் என் வாழ்நாள் முழுவதும் பணி செய்து கிடப்பதே என் பிறவிப் பயன். மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் என்னுடைய சிரம் தாழ்த்தி தலை வணங்கி கோடானுகோடி நன்றிகலந்த வணக்கத்தை உரித்தாக்கி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2012-2013 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் மூன்றாவது அறிக்கையை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) சென்னை மாநகரக் காவல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2012 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2012 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.